சென்னிமலையில் பெரியார் பிறந்தநாள் விழா

சென்னிமலையில் புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பில் பெரியார் படத்தை திறந்து வைத்து உறுதிமொழி எடுத்து கொண்டனர்.

சென்னிமலை, செப். 18: சென்னிமலையில் புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பில் தந்தை பெரியாரின் 148வது பிறந்த தின நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு செல்வராசு தலைமை தாங்கினார். இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த ஈஸ்வரன், ராமசாமி மற்றும் புரட்சிகர இளைஞர் முன்னணியை சேர்ந்த திலீபன், செட்டிராசு உள்பட பலர் கலந்து கொண்டு பெரியார் படத்தை திறந்து வைத்து சமூக நீதி காக்க உறுதி மொழி எடுத்து கொண்டனர்.

அணைகளின் நீர்மட்டம்

அணை	மொத்த கொள்ளளவு	நீர்மட்டம் அடி	நீர் வரத்து கன அடி	வெளியேற்றம் கனஅடி
பவானிசாகர்	105	53.29	1772	105
மேட்டூர்	120	86.850	12000	400

ஈரோடு மார்க்கெட் நிலவரம்
உழவர் சந்தை விலை (ரூ)

தக்காளி	ரூ.28	கொ.மிளகாய்	ரூ.46
கத்திரி	ரூ.30	குண்டு மிளகாய்	ரூ.44
வெண்டை	ரூ.30	சௌசௌ	ரூ.35
புடலை	ரூ.34	காளிபிளவர்	ரூ.30
பீர்க்கன்	ரூ.38	**பழவகைகள் (கிலோ.ரூ)**	
சுரைக்காய்	ரூ.15	மாதுளை	ரூ.170
சாம்பல்பூசணி	ரூ.22	ஆப்பிள்	ரூ.200
சர்க்கரை பூசணி	ரூ.20	சாத்துக்குடி	ரூ. 55
அவரை	ரூ.60	திராட்சை	ரூ.110
கொத்தவரை	ரூ.30	சப்போட்டா	ரூ.35
பாகல்	ரூ.44	கொய்யா	ரூ.50
வெள்ளை முள்ளங்கி	ரூ.20	பப்பாளி	ரூ.34
சின்னவெங்காயம்	ரூ.70	பூவன்	ரூ.32
பெரியவெங்காயம்	ரூ.66	ரஸ்தாளி	ரூ.32
முருங்கை	ரூ.38	தேன்வாழை	ரூ.55
மரவள்ளி	ரூ.25	செவ்வாழை	ரூ.60
தேங்காய்	ரூ.54	மொந்தன்	ரூ.25
சேனை	ரூ.36	பச்சை நாடன்	ரூ.25
கேரட்	ரூ.62	மோரிஸ்	ரூ.26
பீட்ரூட்	ரூ.66	நேந்திரன்	ரூ.42
பீன்ஸ்	ரூ.94	கதலி	ரூ.70
முட்டைகோஸ்	ரூ.20	முலாம் பழம்	ரூ.25
இஞ்சி	ரூ.138	பேரிக்காய்	ரூ.100
உருளைகிழங்கு	ரூ.50	பச்சை பட்டாணி	ரூ.190

சத்தியமங்கலம் பூக்கள் விலை (ரூ)

மல்லிகை	ரூ.600	முதல்	ரூ.820
முல்லை	ரூ.380	முதல்	ரூ.480
செண்டுமல்லி	ரூ. 55	முதல்	ரூ.110
கோழிகொண்டை	ரூ.20	முதல்	ரூ.135
காக்கடா	ரூ.375	அரளி	ரூ.200
ஜாதிமல்லி	ரூ.500	சம்பங்கி	ரூ.180
கனகாம்பரம்	ரூ.800	துளசி	ரூ.50
செவ்வந்தி	ரூ.280		

மஞ்சள் மார்க்கெட்

ஒழுங்குமுறை விற்பனை கூடம்

பெருந்துறை	விரலி: ரூ.15,699 முதல் ரூ.17,011 வரை கிழங்கு: ரூ.15,099 முதல் ரூ.16,455 வரை
ஈரோடு	விரலி: ரூ.12,899 முதல் ரூ.17,421 வரை கிழங்கு: ரூ.12,361 முதல் ரூ.16,439 வரை

பைக், சரக்கு ஆட்டோ மோதி மின்வாரிய ஊழியர் பலி

கோபி, செப். 18: ஈரோடு மாவட்டம், கோபி அருகே உள்ள கலிங்கியம் வெள்ளாங்காட்டு பாளையத்தை சேர்ந்தவர் கிருஷ்ணன் (52). இவர், தாளவாடி மின்வாரிய அலுவலகத்தில் வருவாய் மேற்பார்வையாளராக வேலை செய்து வந்தார்.

நேற்று முன்தினம் வேலை முடிந்து கிருஷ்ணன் வீடு திரும்பிக் கொண்டு இருந்தார். நல்லகவுண்டன் பாளையத்தில் இருந்து கலிங்கியம் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, எதிர் பாராதவிதமாக நிலைதடுமாறிய பைக், எதிரே வந்த சரக்கு ஆட்டோ மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட கிருஷ்ணன், படுகாயமடைந்த நிலையில் அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக கோபி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் வழியிலேயே கிருஷ்ணன் உயிரிழந்தார். இதுகுறித்து கோபி போலீசார் வழக்குப்பதிவு செய்து, ஆட்டோ டிரைவர் காசிபாளையத்தை சேர்ந்த சின்னத்தம்பி (53) என்பவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோபியில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழா

தவெக சார்பில் கோபியில் தந்தை பெரியார் சிலைக்கு, அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அடுத்த படம்: ஈரோடு வடக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில், மாவட்ட செயலாளர் நல்லசிவம் தலைமையில் பெரியார் படத்திற்கு திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

கோபி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் சிறுவலூர் முருகன், அயலூர் சமத்துவபுரத்தில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கினார். அடுத்த படம்: கோபியில் திராவிடர் கழகம் சார்பில் மாவட்ட தலைவர் சென்னியப்பன் தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

ஆதி தமிழர் பேரவை சார்பில் நம்பியூரில் தந்தை பெரியார் சிலைக்கு மாவட்ட செயலாளர் பொன்னுச்சாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கோபி, செப். 18: தந்தை பெரியார் பிறந்தநாளை முன்னிட்டு அவரது உருவ சிலைக்கு வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு திராவிட உணர்வாளர்கள் சமூகநீதி நாளாக கொண்டாடி வருகின்றனர். தவெகவும் கொள்கைத்தலைவராக தந்தை பெரியாரை வைத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று கோபி பெரியார் திடலில் உள்ள தந்தை பெரியாரின் உருவ சிலைக்கு வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில், மாவட்ட செயலாளர் பிரதீப்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாவட்ட திமுக: கோபி அருகே கரட்டூரில் உள்ள ஈரோடு வடக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் தந்தை பெரியாரின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது உருவ படத்திற்கு, மாவட்ட செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் கோபி நகர செயலாளர் என்.ஆர்.நாகராஜ் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் கோபி மத்திய ஒன்றிய செயலாளர் வெள்ளாளபாளையம் சீனிவாசன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி தலைவர் சண்முகசுந்தரம், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சுப்பிரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தெற்கு ஒன்றிய திமுக: தந்தை பெரியாரின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு கோபி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் அயலூர் சமத்துவபுரத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் சிறுவலூர் முருகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அனைவருக்கும் ஒன்றிய செயலாளர் சிறுவலூர் முருகன் இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் பொருளாளர் சண்முகம், நாச்சிமுத்து, செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திராவிடர் கழகம்: பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு கோபி மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் பெரியார் திடலில் உள்ள தந்தை பெரியார் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்ட தலைவர் வழக்கறிஞர் மு.சென்னியப்பன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட காப்பாளர் சிவலிங்கம், மாவட்ட செயலாளர் குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் யோகானந்தம், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் அஜித்குமார், மாணவரணி தலைவர் சூர்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆதி தமிழர் பேரவை: தந்தை பெரியாரின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு நம்பியூரில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு ஆதி தமிழர் பேரவை சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் பொன்னுச்சாமி தலைமையில் மகளிர் அணி மாவட்ட செயலாளர் குமுதா, நம்பியூர் செயலாளர் சேகர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தொழிலாளர் பேரவை மாவட்ட செயலாளர் செல்வன், இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் தங்கமணி, அமைப்பாளர் சிவா, அமைப்பு செயலாளர் சண்முகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தட்கல் விவசாய மின் இணைப்பு 2,922 விவசாயிகள் காத்திருப்பு

ஈரோடு, செப். 18: ஈரோடு மாவட்டத்தில் தட்கல் விவசாய மின் இணைப்பு வேண்டி 2,922 விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

வேளாண் உற்பத்தியைப் பெருக்கி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், 2025-26ம் நிதியாண்டில் பல்வேறு பிரிவுகளின் கீழ் புதிய விவசாய மின் இணைப்புகளை வழங்க, அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டிருந்தது. அதன்படி, நீர் பாசன வசதியை எளிமை படுத்தும் வகையில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக முதியோர் முன்னுரிமை மற்றும் சாதாரண பதிவு மூப்பு அடிப்படையில் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும், தட்கல் முறையிலும் விவசாயிகள் கட்டணம் செலுத்தி விரைவாக மின் இணைப்பு பெற முடியும்.

அதாவது 5 குதிரை திறன் (எச்.பி.) வரை உள்ள மின் மோட்டார்களுக்கு ரூ.2 லட்சத்து 50 ஆயிரம், 7.5 குதிரை திறன் உள்ள மின் மோட்டார்களுக்கு ரூ.2 லட்சத்து 75 ஆயிரம், 10 குதிரை திறன் உள்ள மின் மோட்டார்களுக்கு ரூ.3 லட்சம் வீதம் ஒரு முறை கட்டணம் செலுத்தி மின் இணைப்பு பெறலாம். விவசாய மின் இணைப்பு பெற, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலகத்தை அணுகி விண்ணப்ப படிவத்தை பெறலாம். விண்ணப்ப படிவத்தில் நிலத்தின் சர்வே எண், குதிரைத்திறன் (எச்.பி.) போன்ற விவரங்களை சரியாக நிரப்ப வேண்டும். இதையடுத்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன், விவசாயிகள் தங்கள் நிலத்தின் சிட்டா, அடங்கல், பட்டா, நிலத்தின் வரைபடம், கிணறு அல்லது ஆழ்துளை கிணறு இருப்பதற்கான சான்று, ஆதார் கார்டு, கூட்டு பட்டா நிலமாக இருந்தால் மற்ற பங்குதாரர்களிடம் தடையில்லா சான்று போன்ற ஆவணங்களை இணைக்க வேண்டும். தட்கல் அல்லது பொது பதிவுக்கான கட்டணம் செலுத்தும் போது அதற்கான ரசீதை பெற்றுக்கொள்ள வேண்டும். இதையடுத்து மின் வாரிய அதிகாரிகள் நிலத்தை பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர் இலவச மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுப்பார்கள்.

இதுகுறித்து ஈரோடு மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது:

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் தட்கல் மின் இணைப்பு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 340 விவசாயிகளுக்கு தட்கல் மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு, மாவட்டத்தில் தட்கல் முறையில் மின் இணைப்பு வேண்டி 2 ஆயிரத்து 922 விவசாயிகள் விண்ணப்பித்துள்ளனர். இந்த விண்ணப்பங்களில் இருந்து 340 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும். கடந்த நிதியாண்டில், ஈரோடு மாவட்டத்தில் 317 விவசாயிகளுக்கு தட்கல் விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் இலவச மின்சாரம் வேண்டி 4,457 விவசாயிகளும், ரூ.50 ஆயிரம் செலுத்தி உள்ள 740 விவசாயிகளும், ரூ.25 ஆயிரம் செலுத்தி உள்ள 93 விவசாயிகளும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். இவ்வாறு மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெயிண்டர் தற்கொலை

ஈரோடு, செப். 18: ஈரோடு அடுத்த ஆர்.என்.புதூரை சேர்ந்த பெயிண்டர் செல்வராஜ் (43). மதுப்பழக்கத்திற்கு அடிமையான அவர், தினசரி மதுஅருந்தி விட்டு வந்து, வீட்டில் தனது மனைவி அமுதாவுடன் தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார். இதனால் அமுதா தனது குழந்தைகளுடன், அதேப்பகுதியிலுள்ள அம்மா வீட்டில் வசித்து வருகிறார்.

இந்நிலையில், கடந்த 15ம் தேதி, செல்வராஜ்க்கும், அமுதாவிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் மதுபோதையில் இருந்த செல்வராஜ், வீட்டில் தூக்கிட்டு தற்கொலைக்கு முயன்றார். அவரை மீட்ட உறவினர்கள், செல்வராஜை மீட்டு ஈரோடு அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், செல்வராஜ் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து அவரது அப்பா சின்னராஜ் அளித்த புகாரின்பேரில் சித்தோடு போலீசார் விசாரித்தனர்.

முகாசிபுலவன்பாளையம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உ&வி சங்கம் லிட்., No. E.H. 89
வ.வெள்ளோடு, ஈரோடு மாவட்டம்-638 112.

மகாசபை கூட்ட அறிவிப்பு

அன்புடையீர்,

வணக்கம். நமது சங்கத்தின் மகாசபைக் கூட்டம் வருகின்ற 26.09.2026 தேதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்க அலுவலகக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்ய உள்ளதால் அனைத்து உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பொருள்கள்

1. நீண்டகாலமாக வரவு செலவு செய்யாத உறுப்பினர்கள் குறித்து முடிவெடுத்தல் தொடர்பாக.
2. சங்கத்தில் தகுதியற்ற / காலமான உறுப்பினர்களின் பெயர்களை உடனடியாக நீக்கம் செய்யும் விசயம்.
3. நெசவு அல்லாத வேறு தொழிலுக்கு சென்ற உறுப்பினர்களையும், குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை விபரங்கள் சமர்ப்பிக்காத உறுப்பினர்களையும், இதே வகையான பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினராக உள்ள உறுப்பினர்களையும் உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கம் செய்யும் விசயம்.
4. சங்க செயலாட்சியர் அவர்களால் கொண்டு வரப்படும் இதர விசயங்கள்.

இடம்: வெள்ளோடு
நாள்: 18.09.2026

(ஒப்பம்) திருமதி. கீ.கஸ்தூரி
கைத்தறி ஆய்வாளர்/ செயலாட்சியர்

கே.1177 வெள்ளோடு தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட்.,
84, மெயின்ரோடு, வ.வெள்ளோடு-638 112. ஈரோடு மாவட்டம்.

மகாசபை கூட்ட அறிவிப்பு

அன்புடையீர்,

வணக்கம். நமது சங்கத்தின் மகாசபைக் கூட்டம் வருகின்ற 26.09.2026 தேதி சனிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு சங்க அலுவலகக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்ய உள்ளதால் அனைத்து உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்கள்

1. நீண்டகாலமாக வரவு செலவு செய்யாத உறுப்பினர்கள் குறித்து முடிவெடுத்தல் தொடர்பாக.
2. சங்கத்தில் தகுதியற்ற / காலமான உறுப்பினர்களின் பெயர்களை உடனடியாக நீக்கம் செய்யும் விசயம்.
3. நெசவு அல்லாத வேறு தொழிலுக்கு சென்ற உறுப்பினர்களையும், குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை விபரங்கள் சமர்ப்பிக்காத உறுப்பினர்களையும், இதே வகையான பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினராக உள்ள உறுப்பினர்களையும் உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கம் செய்யும் விசயம்.
4. சங்க செயலாட்சியர் அவர்களால் கொண்டு வரப்படும் இதர விசயங்கள்.

இடம்: வெள்ளோடு
நாள்: 18.09.2026

(ஒப்பம்) திருமதி. இரா.பூமதி
கைத்தறி ஆய்வாளர்/ செயலாட்சியர்

OMKARA
ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்
CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்குநகர் விரிவாக்கம், திருப்பூர்–641607.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com,
அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: + 91 93446 84194/+91 98840 62068/9962333307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஓஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஓஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) ஃபுல்லெர்ட்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (உரிமையீந்தோர் நிறுவனம்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஓஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஓஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஓஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர் & உப கடன்தாரர் பெயர்	திரு. S. பெருமாள் (கடன்தாரர்), திருமதி. P. தனபாக்கியம் (உப கடன்தாரர்) மற்றும் திரு. P. ஜெயபிரகாஷ் (உப கடன்தாரர்)
கடனீட்டுச் சொத்து விவரங்கள் அம்மாபேட்டை சார் பதிவு அலுவலக ஆவண எண்.260/2011, தேதி 02.02.2011 இன்படி திரு. S. பெருமாள் அவர்களுக்குச் சொந்தமான சொத்து.	ஈரோடு பதிவு மாவட்டம், அம்மாப்பேட்டை சார் பதிவு மாவட்டம், ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், கேசரிமங்கலம் கிராமம், துணைப் பிரிவின்படி R.S.No. 341/1A (R.S.No. 341/1) Pa.Ka.Sa.268–A,B.C.D.E), புன்செய் ஹெக்டேர் 1.37.5 ஏர்ஸ் கிஸ்த் ரூ.4.65 இல் உள்ள சொத்து, பின்வரும் எல்லைகளுக்குள்: மேற்கு மற்றும் வடக்கு: விற்பனையாளர் வீட்டு மனைகள், கிழக்கு: மாகப்பன் வீடு, தெற்கு: 8 அடி கிழக்கு மேற்கு வண்டிப் பாதை, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக இரு பக்கங்களிலும் 61 அடி, வடக்கிலிருந்து தெற்காக இரு பக்கங்களிலும் 43 அடி, மொத்தப் பரப்பளவு 243.68 ச.மீட்டர் அல்லது 2623 சதுரடி நிலம் வழக்கமான பாதை வண்டிப்பாதை மீது உரிமை, பயன்பாட்டு உரிமைகள் ஏனையவற்றுடன் உள்ள மேற்சுறிய சொத்து கேசரிமங்கலம் கிராம ஊராட்சி மற்றும் அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்துக்குள் அமைந்துள்ளது.
சொத்து உரிமையாளர்: திரு. S. பெருமாள், த/பெ, திரு. செங்கா கவுண்டர்	

13(2) அறிவிப்பு நாள் 08.02.2022	நேரடி சுவாதீனம் நாள் 10.12.2025	15.09.2026 தேதியின்படி நிலுவைத் தொகை ரூ.52,04,151/– (ரூபாய் ஐம்பத்திரண்டு லட்சத்து நான்காயிரத்து நூற்று ஐம்பத்தொன்று மட்டும்)
நிர்ணய விலை ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்)	முன்வைப்புத் தொகை– நிர்ணயவிலையில் 10% ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	ஏலம் உயர்த்தும் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)	சொத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
கணக்கு விவரங்கள்:	கணக்கு எண்.344905000929, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 22/2020–21 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்: ஜசிஜசிஜ பேங்க், கிளை: பாந்த்ரா(கி), மும்பை, IFSC Code:ICIC0003449		
மின்–ஏலம் நாள் & நேரம் 07 அக்டோபர் 2026 (முதன்கிழமை) காலை 11.00 முதல் நண்பகல் 12.00 வரை.		ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள் 05 அக்டோபர் 2026 (திங்கள் கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக	

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஓஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 16.09.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்துலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(V M திவாகரன்)
கைபேசி எண். 9962333307
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 18.09.2026
இடம்: சென்னை